உ

சிவமயம்



கீழ்க்கரவை செங்குந்த குல வழித் தோன்றலும்
யாழ்ப்பாணம், வடமராட்சி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமாகிய

அமரர்

# உயர்திரு.முருகேசு கந்தசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த


# நினைவு மலர்

29.01.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மனம் மகிழ
16.04.1933

அமரர்

மனம் நெகிழ
30.12.2017

# முருகேசு கந்தசாமி

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஏவிளம்பி வருஷ மார்கழி மாதத்து
பூர்வபட்ஷ துவாதசி திதியதனில்
பிரதோஷ நன்நாளில் முருகேசு கந்தசாமி நல்லாளன்
சேர் உறவு நீத்து சங்கரன் சேவடியில் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கீழ்க்கரவை செங்குந்த குல வழித் தோன்றலும்
யாழ்ப்பாணம், வடமராட்சி, கரவெட்டி கிழக்கைப்
பிறப்பிடமாகவும்,
வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமாகிய

# அமரர்
# உயர்திரு.முருகேசு கந்தசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "வெள்ளை மலர்"

## 29.01.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பான தெய்வத்தின்
பாத கமலத்திற்கு இந்நூல்

# சமர்ப்பணம்

குடும்பத்தின் குலவிளக்காய்
குன்றாத ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பிள்ளைகளின் கல்விதனைப்
பெருநிதியாய்க் கொண்டு
நேரிய வழியைக் காட்டி
நிகரில்லா அன்பை ஊட்டி
கூரிய மதியால் நல்ல
கொள்கையால் எமை வழிநடத்தி
நலமெல்லாம் எமக்குத்தந்து
சனிப் பிரதோஷ தினத்தன்று
சிவனடியைச் சேர்ந்து விட்ட
எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திக்காய் - அவர்தம்
பாத மலரடியில் இவ்
வெள்ளை மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திகட சக்கரச் செம்முகமைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியாவுள
மிகட சக்கர மெய்ப்பதம் போற்றுவாம்.

## தேவாரம்

**நாவுக்கரசர் பாடியது 4ம் திருமுறை - திருவிருத்தம்**

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்று என் உள்ளமும் நானும் கிடந்தலைந்தெய்தெழுந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய் கச்சி ஏகாம்பரனே.

## திருவாசகம்

**மாணிக்கவாசகர் அருளியது 8ம் திருமுறை**

இன்றெனக்கருளி இருள் கடிந்துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்புற நினைந்தேன்
நீ யலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாய்
திருப் பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியன்றில்லை
யார் உன்னை அறியகிற்பாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

**கண்டராதித்தர் அருளிய ஒன்தாம் திருமுறை**

முத்தியாளர் மூவாயிரவர் நின்னொடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையை
தெத்தே என்று வண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துளி
அத்தா உன் ஆடல்காண அனைவதும் என்றுகொலோ.

## திருப்பல்லாண்டு

**சேந்தனார் அருளியது ஒன்பதாம் திருமுறை**

நிட்டையில்லாவுடல் நீத்தெமையாண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறன்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கெம் அகம்நெக ஊறும்
அமிர்தனுக்கால நிழல்
பட்டனுக்கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

**சேக்கிழார் சுவாமிகள் அருளியது 12ம் திருமுறை**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்கவென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

### (அருணகிரிநாதர் இயற்றியது)

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சக்திச்சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர – எனவோதும்
முக்கட்பர மற்கச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து முவர்க்கத் தமரரும் – அடிபேண
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் – இரவாக
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தருபொருள்
பட்சத்தொரு ரட்சித் தருள்வதும் – ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நித்தப் பதம் வைத்துப் பைரவி
திக்கொட்க நடிக்கக் கழுதொடு – கழுதாட
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ர பௌரிக்குத் திரிகடுக – எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென – முதுகூகை
கொட்புற் குறழ நட்புற்றவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல – பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வாளது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30.12.2017 அன்று சிவபதமடைந்த முருகேசு கந்தசாமி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படும் ஈழநாட்டின் வடமராட்சிப் பகுதியில் செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கு கரவெட்டியில் வீரவாகுதேவ மரபிலும் செங்குந்த முதலியார் குலத்திலும் நந்தி கோத்திரத்திலும் தோன்றிய முருகேசு கந்தசாமி (வெள்ளை) முருகேசுவுக்கும் சின்னம்மாவுக்கும் கனிஷ்ட புத்திரனாக 1933ம் ஆண்டு சீறழுக வருடம் சித்திரை மாதம் 16ம் நாள் மண்ணில் அவதரித்தார்.

இவருடன் கந்தையா, சின்னத்தம்பி, வள்ளிப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, நல்லதம்பி, மாணிக்கர் ஆகிய உடன்பிறப்புக்கள் தோன்றினார்கள். பெற்றோரதும் உடன்பிறப்புக்களின் அரவணைப் பினால் செல்லப்பிள்ளையாக வெள்ளைத் தம்பியாகவும், வெள்ளை அண்ணன், வெள்ளை மாமா என்று உற்றாரும் உறவினரும் நாமம் சூட்டி அழைத்து வந்தனர்.

இவர் ஆரம்பக் கல்வி முதல் எஸ்.எஸ்.சி வரை விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். அவர் கல்வி பயின்ற காலம் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலமாதலால் ஆங்கில மொழியில் கல்வி கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கல்வியில் சிறந்து விளங்கிய போதும் ஆங்கில மொழி மூலம் ஆகையால் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு முடியாமல் போய்விட்டது.

இவர் 1965ம் ஆண்டு வியாபாரிமூலையைச் சேர்ந்த நிதிபதி மகள் இராஜேஸ்வரியை இல்லத்துணைவியாக ஏற்றுக்கொண்டு ஐந்து புத்திரர்களையும் பெற்றெடுத்தார்கள். அக்காலப் பகுதியில் கமநல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை நிலையத்தில் நீண்டகாலம் பணிபுரிந்தார். பின்னர் நாட்டுச் சூழ்நிலை காரணமாக வேலையை இடைநிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தமது மூத்த புத்திரிக்கு வாசுகி என்னும் நாமம் சூட்டி செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தார்.

"தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பதற்கிணங்க மூத்த மகளை உயர்கல்லூரிக்கு அனுப்பி விஞ்ஞானப் பிரிவில் கற்பித்து ஒரு தாதியாக்கினார். இன்று தாதியர் பரிபாலகியாகப் பதவியுயர்வு பெற்று வவுனியாவில் வசித்துவரும் சிறீதரன் அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவனாக்கி சாகித்தியன், சக்திகா என்னும் இரு புதல்வர்களையும் பெற்றெடுத்து வவுனியாவில் வாழ்ந்து வருகின்றார்.

இரண்டாவது பிள்ளையாக சாந்தன் என்னும் மகனைப் பெற்றெடுத்தார். அவரும் கல்வி வேள்விகளில் சிறந்து விளங்கி வரும் நாளில் யுத்த சூழல் அவனின் கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இது இவ்வாறு இருந்த போதும் அவரின் புத்தி சாதுரியமான செயற்பாட்டால் மின்னியல் தொழிலைக் கற்று சிறந்த மின்னிணைப்பாளராகி விட்டார். பின்னர் எட்டியாந்தோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியராகப் பணிபுரியும் வனிதாவைத் துணைவியாக்கி சுவேதா, சுகிதா, என்னும் இரு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து எட்டியாந்தோட்டையில் வசித்து வருகின்றார்.

மூன்றாவது மகனாகப் பிறந்தவனுக்கு ஆதவன் என்று சூரியனின் பெயரை வைத்துவிட்டார். அது சூரியன் போலப் பிரகாசிக்கின்றது. கல்வியில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தும் யுத்தச்சுழல் அவனது கல்வியிலும் விளையாடி விட்டது. கணிதப்பிரிவில் உயர்கல்வியைக் கற்றுக் கொண்டிருந்த போதும் அதைத் தொடர முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் வவுனியாவில் ஆசிரியராகப் பணிபுரிந்த வசிதா என்னும் பெயருடன் மிகவும் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தவளைத் தனது வாழ்கைத் துணைவியாக்கி கனடா நாட்டிற்குச் சென்று நிதர்ஷனா, நிருஷனா, நிந்தனா ஆகிய மூன்று பெண் குழந்தைகளுடன் வசித்து வருகின்றார். தாய், தந்தை சகோதரங்களைச் சந்தோஷமாக வைத்திருக்க இரவு பகலாக அயராது பாடுபட்டு இலங்கைக்கு வந்து தனது மூத்த மகளுக்கு பூப்புனித நீராட்டு விழாவும் நடாத்தி தாய் தந்தையரை புனித தல யாத்திரைக்கும் அழைத்துச் சென்று தன்னால் இயன்றளவுக்கு அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியும் சென்றுள்ளார்.

நான்காவதாகப் பிறந்த மகளுக்கு கவிதா என்னும் நாமம்சூட்டி விஞ்ஞானப் பிரிவில் உயர்கல்வியைக் கற்பித்து சிறந்த பெறுபேற்றுடன் ஆங்கில ஆசிரியராகச் சில காலம் பணி புரிந்து பின்னர் மலேரியாத் தடுப்புப் பிரிவில் பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராகப் பணி புரிந்து வரும் நாளில் லிங்கமூர்த்தி என்னும் வாழ்க்கைத் துணைவனையும் சங்கவன், சங்கிசை எனும் இரு செல்வங்களையும் பெற்று இரு குழந்தைகளின் கல்விச் சிறப்பால் பூரிப்படைந்தார். மருமகன் (லிங்கமூர்த்தி) அவருக்கு கிடைத்த மூன்றாவது மகன் என்று கூறும் அளவுக்கு இறுதிவரை அவரது கடமைகளை உடனிருந்து கவனித்தது நோயுற்ற காலத்தில் பராமரித்து பாசமுடன் செயற்பட்டமை எல்லோர் மனதிலும் வியப்பையூட்டு கின்றது.

ஐந்தாங் கால் பெண் கெஞ்சினாலும் கிடையாது என்பார்கள். அதற்கிணங்க அவளுக்கு தனது கோத்திரப் பெயராகிய நந்தினி என்று நாமஞ் சூட்டி அவளையும் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்பித்து பின்னர் கணித ஆசிரியரான பிறேம்குமார் என்னும் துணைவரையும் கரம்பிடித்து கனியிசை, வர்ணிகா என்னும் இரு குழந்தைகளுடன் இனிதே வாழ்க்கையை நடாத்தி வருகின்றார். இவள் தந்தையை இறுதி வரை பேணும் பாசத்திற்குரிய மகளாக இறுதிவரை உடனிருந்து அவர் கடமைகளை நிறைவேற்றியும் உள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வாழ்க்கையின் ஆரம்பத்தில் சில கஷ்டங்களை அனுபவித்தாலும் இறுதியில் பிள்ளைகளின் முன்னேற்றங்களைக் கண்டும் அவர்களின் அனுசரணையாலும் பூரிப்படைந்து மிகவும் சந்தோஷமாக இருந்து வரும் நாளில் புதுவிதமான நோய் ஒன்று அவரைப் பிடித்து விட்டது. அவரது உடலின் பகுதியில் காலுக்கு இரத்தத்தைப் பாய்ச்சும் குருதிக்குழாயில் குருதி கடத்தப்படாது தடைப்பட்டதால் காலில் கடுமையான வலி ஏற்பட்டு காலின் ஒரு பகுதியை அகற்ற வேண்டிய தேவையும் ஏற்பட்டது. அவ்வாறு காலின் பகுதியை அகற்றியும் அவரது வேதனை குறையவில்லை. அவரின் இந்த வேதனையைக் கண்டு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஆறுதல் கூற அவருக்கு ஆதரவாக இருந்தார்கள்.

இறுதிவரை மக்கள், மருக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள். அயலவர் என அனைவரும் அன்புடனும், பாசத்துடனும் பரிவுகாட்டி அவரின் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரியவர்களாகி விட்டதுடன் இறுதிவரை உடனிருந்து கவனித்து சிவ மூலமந்திரம் காதில் ஒலிக்க இறைவனது அன்பில் வாழ எண்ணி எம்மையெல்லாம் கண்ணீரில் மிதக்க வைத்துவிட்டு சனிப்பிரதோஷ நன்நாளில் பூர்வபக்க துவாதசித் திதியதனில் (30.12.2017) காலை 10.00 மணியளவில் மனைவி, மக்கள் கண்ணீர் மல்க இறைவனடி சேர்ந்தார்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷம் எப்படி விஷேசமானது

சிவபெருமானுக்கு உகந்த விரதங்களில் பிரதோஷமும் ஒன்று. பிரதோஷ வழிபாடு சகல சௌபாக்கியங்களையும் தரவல்லது. குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். வறுமை நீங்கி, செல்வம் பெருகும். நோய்கள் நீங்கும். எடுத்துக் கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறையில் ஒரு பிரதோஷமும் தேய்பிறையில் ஒரு பிரதோஷமும் மாதமிருமுறை பிரதோஷம் வரும். பிரதோஷம் என்பது ஏழரை நாழிகை மட்டும் தான். திரயோதசி நாளில் சூரியன் மறையும் மாலை வேளையில் சூரியன் மறைவதற்கு முன்பு உள்ள மூன்றே முக்கால் நாளிகையும் மறைந்த பின்பு உள்ள மூன்றே முக்கால் நாளிகையும் அதாவது மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை பிரதோஷ காலமாகும்.

பொதுவாக வளர்பிறையிலோ, தேய்பிறையிலோ மாலை வேளையில் திரயோதசி வந்தால் அது மஹாபிரதோஷமாகும். அதுவே சனிக்கிழமைகளில் வந்தால் அது சனிப்பிரதோஷமாகும்.

தேவர்களின் துன்பம் போக்க நஞ்சை உண்ட சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் துன்பம் நீக்கி இன்புற்று வாழ கயிலாய மலையில் பிரதோஷ காலத்தில் தான் நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் திருநடனமாடி மகிழ்வித்தார். அதனால் பிரதோஷ காலத்தில் தவறாமல் சிவாலயத்திற்குச் சென்று நந்தி தேவருக்கு சிறப்பு வழிபாடு செய்து சிவபெருமானை நந்தியின் இரு கொம்புகளுக்கிடையில் நடனமாடும் கோலத்தில் வழிபடுதல் சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே பிரதோஷ தினத்தன்று பிரதோஷ வேளையாகிய மாலை 04.00 மணி முதல் 6.00 மணி வரை சிவாலயத்தில் வழிபடும் போது சோம சூக்த பிரதட்சணம் செய்வது விஷேச பலனைத் தரும்.

சிவாலயத்தில் நந்தி பெருமானிடம் புறப்பட்டு இடப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கி அங்கிருந்து வந்த வழியே திரும்பி வந்து நந்தி தேவரை வணங்கி வலப்புறமாக கோமுகி வரை வந்து மீண்டும் வந்த வழியே திரும்பி நந்தி தேவரின் கொம்புகளுக்கிடையே சிவபெருமானை வணங்க வேண்டும் இப்படி மூன்று முறை வணங்கும் முறைக்கு சோம சூக்த பிரதட்சணம் என்று பெயர்.

இந்த சோம சூக்த பிரதட்சணம் செய்வதால் ஒரு வருடத்திற்கு ஆலயம் சென்று இறைவனை வழிபாடு செய்த பலனும் சனிப்பிரதோஷ தினத்தில் இந்த சோம சூக்த பிரதட்சணம் செய்தால் ஐந்து வருடத்திற்கு ஆலயம் சென்று இறைவனை வழிபாடு செய்த பலனும் கிடைக்கும். என்கிறார்கள்.

## பிரதோஷத்தின் மகிமை

மந்திர மலையை மத்தாக்கி வாசுகிபாம்பை கயிறாக்கி பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த போது ஆலகால விஷம் வெளிப்பட்டதும் அப்படியே போட்டுவிட்டு அனைவரும் ஓட்டம் பிடித்தனர். திருமால், பிரம்மன், தேவர்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் அந்த விஷத்தை சிவபெருமான உண்டார். அன்னை பார்வதி சிவபெருமானின் கழுத்தில் தன் கைகளால் தடவிய போது கொடிய விஷம் அமுதமாக மாறியது. சிவபெருமான் திருநீலகண்டர் ஆனார்.

11ம் பிறையாகிய ஏகாதசியில் அவர் விஷம் உண்டார். 12ம் பிறையாகிய துவாதசியில் காட்சி தந்தார். 13ம் பிறையாகிய திரியோதசி மாலை பிரதோஷ காலத்தில் நடன தரிசனம் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் விஷம் உண்ட நாள் சனிக்கிழமையாகும். எனவே சனிப்பிரதோஷம் மகத்தான சிறப்பு வாய்ந்தது.

பிரதோஷ காலம் தினமும் சூரியன் மறைவதற்கு முன் மூன்றே கால் நாழிகையும் மறைந்த பிறகு மூன்றே கால் நாழிகையும் என மொத்தம் ஏழரை நாழிகை (3மணி நேரம்) ஆகும். பிரதோஷ காலத்தில் ஈஸ்வரன் தன்னுள் எல்லாவற்றையும் ஒடுக்கிக் கொள்கிறார்.

வளர்பிறை தேய்பிறையின் 13ம் நாள் திரயோதசி திதியில் மாலை நேரத்தில் பிரதோஷ தரிசனம் செய்ய வேண்டும். நந்திதேவரின் கொம்புகளின் நடுவே தியானிப்பது சிறப்பாகும். பிரதோஷமானது நித்திய பிரதோஷம், பட்சப் பிரதோஷம், மாதப் பிரதோஷம், மகா பிரதோஷம், பிரளய பிரதோஷம் என்று ஐந்து வகைப்படும்.

**நித்திய பிரதோஷம்** : தினமும் பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடுவது.

**பட்சப் பிரதோஷம்** : சுக்கிரபட்ச சதுர்த்தி பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடுவது.

**மாதப் பிரதோஷம்** : கிருஷ்ணபட்ச திரயோதசி பிரதோஷ காலத்தில் சிவனை வழிபடுவது.

**மஹா பிரதோஷம்** : சனிக்கிழமைகளில் திரயோதசி வந்தால் அது மஹா பிரதோஷம் ஆகும்.

**பிரளய பிரதோஷம்** : உலகம் அழியும் பிரளய காலத்தில் சிவனிடம் அனைத்தும் ஒடுங்குவது பிரளய பிரதோஷம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷ பூஜை அபிஷேகத்திற்கு கீழ்கண்ட பொருட்களைக் கொடுத்தால் விளையும் பலன்கள் வருமாறு

- பால் கொடுத்தால் நோய் தீர்ந்து நீண்ட ஆயுள் கிடைக்கும்.
- தயிர் தந்தால் பல வளமும் உண்டாகும்.
- தேன் கொடுத்தால் இனிமையான சரீரம் கிட்டும்.
- பழங்கள் கொடுத்தால் விளைச்சல் பெருகும்.
- பஞ்சாமிர்தம் தந்தால் செல்வச் செழிப்பு ஏற்படும்.
- நெய் கொடுத்தால் முக்திப் பேறு கிட்டும்.
- இளநீர் தந்தால் நல்ல மக்கட் பேறு கிடைக்கும்.
- சர்க்கரை கொடுத்தால் எதிர்ப்புகள் மறையும்.
- எண்ணெய் தந்தால் சுகவாழ்வு கிட்டும்.
- சந்தனம் கொடுத்தால் சிறப்பான சக்திகள் பெறலாம்.
- மலர்கள் தந்தால் தெய்வ தரிசனம் கிடைக்கும்.

மனிதர்களாகிய நாம் எத்தனை தோஷங்களுடன் பிறவி எடுத்துள்ளோம் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பிரதோஷ உபாசனையால் அத்தனை தோஷங்களையும் போக்கிக்கொள்ள முடியும். எனவே பிரதோஷ பூசை செய்து நன்மை பெறுவோம்.

## பிரதட்சண முறை

01. முதலில் சிவலிங்கத்தையும் நந்தி தேவரையும் வணங்க வேண்டும்.
02. அப்பிரதட்சணமாக சண்டிகேஸ்வரர் சன்னிதி வரை சென்று அவரை வணங்க வேண்டும்.
03. அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவலிங்கத்தையும் நத்தி தேவரையும் வணங்க வேண்டும்.
04. வழக்கம் போல் பிரதட்சணமாக ஆலயத்தை வலம் வரும் பொழுது சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும்.
05. நிர்மாலயத் தொட்டிவரை வந்து அத்தொட்டியைக் கடக்காமல் வந்த வழியே திரும்பி (அப்பிரதட்சணமாய்) சன்னிதிக்கு வந்து சிவலிங்கத்தையும் நந்தி தேவரையும் வணங்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும் இதைப் பிரதோஷ காலத்தில் மட்டுமே செய் வேண்டும். சாதாரண நாட்களில் செய்யக் கூடாது. இவ்வாறு செய்தால் அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். பிரதோஷ காலம் பரமேஸ்வரனை தியானம் செய்ய தகுந்த காலமாகும்.

## நினைத்த காரியம் நிறைவேற்றிட

மூலவருக்குத் தீபாராதனை முடிந்த பிறகு நந்தி தேவரின் காதருகில் நின்று பிறருக்குக் கேளாத வகையில் நம்முடைய வேண்டுதல்களைக் கூற வேண்டும். இப்படி பன்னிரண்டு பிரதோஷ தினங்களில் வேண்டுதல்களைக் கூறி வந்தால் பதின்மூன்றாவது பிரதோஷ பூஜை அன்று நாம் செய்ய வேண்டியது கிடைத்துவிடும். அந்த நம்பிக்கையுடன் செயற்பட்டால் இது உறுதியாக நடக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To Mother

M - is for Mother so great and kind
உயர்ந்த அன்புள்ளம் கொண்டவர்

O - is for an open heart of a mother
சிறந்த மனப்பான்மை கொண்டவர்.

T - is for teacher she always
ஆசிரியராக எப்போதும் இருப்பவர்.

H - is for her healthful of love former
உள்ளம் நிறைந்த அன்புடையவர்

E - is for the effect she takes
ஊக்கம் எடுப்பவர்.

R - is for rest she never takes
எப்போதும் ஓய்வின்றி உழைப்பவர்.

## வெற்றியின் இரகசியம்

| | | |
|---|---|---|
| அன்பு காட்டு | ஆனால் | அடிமையாகி விடாதே |
| இரக்கங் காட்டு | ஆனால் | ஏமாந்து போகாதே |
| பணிவாயிரு | ஆனால் | கோழையாய் இராதே |
| கண்டிப்பாயிரு | ஆனால் | கோபப்படாதே |
| சிக்கனமாயிரு | ஆனால் | கஞ்சனாய் இராதே |
| வீரனாயிரு | ஆனால் | போக்கிரியாய் இராதே |
| சுறுசுறுப்பாயிரு | ஆனால் | பதட்டப்படாதே |
| தர்மம் செய் | ஆனால் | ஆண்டியாகி விடாதே |
| பொருளைத்தேடு | ஆனால் | பேராசைப்படாதே |
| உழைப்பை நம்பு | ஆனால் | கடவுளை மறந்து விடாதே. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்கூடம் - SCHOOL

பள்ளிக்கூடத்தை நாம் ஆங்கிலத்தில் ஸ்கூல் என்று அழைக்கின்றோம். இந்த ஸ்கூல் (School) என்பதற்கு அழகிய பொருள் உண்டு. அது என்ன என்பதை அறிந்த கொள்ளுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| S | - | Sincerity | - | நேர்மை |
| C | - | Capacity | - | திறமை |
| H | - | Honesty | - | உண்மை பேசும் குணம் |
| O | - | Obedience | - | மரியாதை |
| O | - | Orderliness | - | ஒழுக்கம் |
| L | - | Learning | - | கல்வி அறிவு |

இத்தகைய பண்புகளைப் போதிக்கும் இடம் பள்ளிக்கூடம் என்பதை விளக்குவதே (School) என்பதாகும்.

## Teacher

| | | | | |
|---|---|---|---|---|
| T | - | is for Tactful | - | சாமர்த்தியம் |
| E | - | is for Education | - | கல்வியறிவு |
| A | - | is for Ability | - | திறமை |
| C | - | is for Character | - | நன்னடத்தை |
| H | - | is for Health | - | ஆரோக்கியம் |
| E | - | is for Enthusiasm | - | ஊக்கம் |
| R | - | is for Regularity | - | ஒழுக்கம் |

## Student

| | | | | |
|---|---|---|---|---|
| S | - | is for Searcher | - | தேடுபவர் |
| T | - | is for Truthful | - | உண்மையானவர் |
| U | - | is for Ultra | - | தீவிரமானவர் |
| D | - | is for Disciple | - | பின்பற்றுபவர் |
| E | - | is for Efficient | - | ஊக்கமுடையவர் |
| N | - | is for Noble | - | உயர்குணசாலி |
| T | - | is for Trust worthy | - | நம்பகத்தன்மையானவர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

| | | |
|---|---|---|
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | – | அதை நழுவ விடாதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | – | அதை சென்று முடியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விடுகதை | – | அதை விடுவியுங்கள் |
| வாழ்க்கை ஒரு விளையாட்டு | – | அதில் ஈடுபடுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | – | அதை வென்று காட்டுங்கள் |
| வாழ்க்கை ஒரு வெகுமதி | – | அதை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போட்டி | – | அதில் வெற்றி கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கலை | – | அதை அழகுபடுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு வேதனை | – | அதைத் தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சவால் | – | அதை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | – | அதற்கு மனம் தளராதீர்கள் |
| வாழ்க்கை ஒரு பிரச்சனை | – | அதற்குத் தீர்வு காணுங்கள் |

# நேரத்தைச் செலவிடு

| | |
|---|---|
| உழைக்க நேரத்தை எடுத்துக்கொள் | அது வெற்றியின் விலை |
| சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள் | அது சக்தியின் ஊற்று |
| விளையாட நேரத்தை எடுத்துக்கொள் | அது இளமையின் இரகசியம் |
| படிக்க நேரத்தை எடுத்துக்கொள் | அது அறிவின் வாயில் |
| நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள் | அது இன்பத்தின் பாதை |
| கனவு காண நேரத்தை எடுத்துக்கொள் | அது சாதனைக்கு வழி |
| அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள் | அது இறைவனின் கொடை |
| சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள் | அது இதயத்தின் இசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ✦ | 01 | காகித விழா | – | Paper |
| ✦ | 02 | பருத்தி விழா | – | Cotton |
| ✦ | 03 | தோல் விழா | – | Leather |
| ✦ | 04 | பூ, பழ விழா | – | Silk |
| ✦ | 05 | மர விழா | – | Wood |
| ✦ | 06 | இரும்பு விழா | – | Iron |
| ✦ | 07 | செம்பு விழா | – | Copper |
| ✦ | 08 | வெண்கல விழா | – | Electrical |
| ✦ | 09 | மண்கல விழா | – | Pottery |
| ✦ | 10 | தகர விழா | – | Tin |
| ✦ | 11 | எஃகு விழா | – | Steel |
| ✦ | 12 | லினன் விழா | – | Lenen |
| ✦ | 13 | பின்னல் விழா | – | Lace |
| ✦ | 14 | தந்த விழா | – | Ivory |
| ✦ | 15 | படிக விழா | – | Crystal |
| ✦ | 20 | பீங்கான் விழா | – | China |
| ✦ | 25 | வெள்ளி விழா | – | Silver |
| ✦ | 30 | முத்து விழா | – | Pearl |
| ✦ | 40 | மாணிக்க விழா | – | Ruby |
| ✦ | 45 | இரத்தின விழா | - | Sapphire |
| ✦ | 50 | பொன் விழா | – | Gold |
| ✦ | 55 | மரகத விழா | – | Emerald |
| ✦ | 60 | வைர விழா | – | Diamond |
| ✦ | 75 | பவள விழா | – | Platinum |
| ✦ | 100 | நூற்றாண்டு விழா | – | Century |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

✿முருகேசு + ✿சின்னம்மா

↓

✿கந்தையா

✿வள்ளிப்பிள்ளை + ✿கிஷ்ணபிள்ளை

✿சின்னத்தம்பி + ✿அன்னம்மா

✿சிதம்பரப்பிள்ளை + பத்தினியம்பிள்ளை

✿நல்லதம்பி + ✿அருளம்மா

✿மாணிக்கர் + சரஸ்வதி

**✿கந்தசாமி**

✿நமசிவாயம் + ✿பாக்கியம்

↓

✿சண்முகநாதன் + ✿மலர்

இராசேஸ்வரி

| | | | | |
|---|---|---|---|---|
| வாசுகி | சாந்தன் | ஆதவன் | கவிதா | நந்தினி |
| + | + | + | + | + |
| ஸ்ரீதரன் | வனிதா | வசிதா | லிங்கமூர்த்தி | பிறேம்குமார் |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| சாகித்தியன்<br>சக்திகா | சுவேதா<br>சுகிதா | நிதர்சனா<br>நிருஷனா<br>நிந்தனா | சங்கவன்<br>சங்கிசை | கனியிசை<br>வர்னிகா |

✿ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் நன்றிகள்



***"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொண்ட மகற்கு"***

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து இறையடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் பிரிவினால் துயருற்றிருந்த வேளையில் உடனிருந்து உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம் வெளிநாடு மற்றும் உள்நாடுகளில் இருந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நோயுற்றிருந்த வேளை உடனிருந்து உதவியோர், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்ட (அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும், மரணச்செய்தி கேட்டுத் துயர்பகிர்ந்த) மலேரியாத்தடை இயக்கப் பிரிவினர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தி னருக்கும், இளங்கதிர் சனசமூக நிலையத்தினர், சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினர், கிளி/இராமநாதபுரம் அ.த.க பாடசாலை சமூகத்தினருக்கும், நோயுற்றவேளை வவுனியா, வட்டக்கச்சி, கிளிநொச்சி வைத்தியசாலையில் உதவிபுரிந்த வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர் களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணத்தில் இன்று பல்வேறு வழிகளில் உடனிருந்து உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் மற்றும் இம்மலரை அச்சிட்டுத்தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிர்வாகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி



**வாசுகி இல்லம்"**
**சிவிக்சென்ரர்.**
**வட்டக்கச்சி.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



சிவரஞ்சனம். 077 3068982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org